தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்கிழமை, 1971 டிசம்பர் 14

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை மாநகருக்குக் குடிநீர்

* 344 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு காவிரி குடிநீர் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் 1974-ஆம் ஆண்டு இடையில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என் கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது சென்னை நகரில் உள்ளவர்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதையும், காவிரி குடி நீர் திட்டம் நிறைவேற்றப்படும் போது எவ்வளவு தண்ணீர் கிடைக்க இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்காகக் கிட்டத்தட்ட மூன்று கோடி காலன் தண்ணீர் ஒரு நாளைக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு எவ்வளவு கிடைக்கும் என்பதை இப்பொழுது அறுதியிட்டுக் கூறுவதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. கா. காளிமுத்து : வீராணம் திட்டத்திற்கு மத்திய அரசின் காரணமாக இடையில் ஏதேனும் முட்டுக்கட்டை ஏற்பட்டதா ? திட்டச் செலவு மதிப்பீடு இடையில் மாற்றியமைக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செலவு மதிப்பீடு எதுவும் இப்பொழுது மாற்றியமைக்கப்படவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திடமிருந்து அன்னியச் செலாவணி வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் ஏற்கெனவே பல கட்டங்களில் நிறைவேற்றப்படவேண்டியிருந்த அந்த வேலை சற்றுத் தாமதப்பட்டது.

திரு. எம். தேவராசன் : காவிரியுடன் கங்கையை இணைக்கும் திட்டம் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை இருக்கிறது. அது விரைவில் திட்டம் ஆவதற்கான நடவடிக்கைகள் நடைபெறும் என்று நம்புகின்றோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும்போது, கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிருஷ்ணா தண்ணீர் பற்றி மற்றொரு கேள்வி இருக்கிறது. அந்தக் கேள்வியிலே பதிலளிக்கலாம் என்று கருதுகிறேன். இருந்தாலும், காவிரிக்காக கிருஷ்ணா கைவிடப்படவில்லை.

திரு. கு. காமாட்சி : சென்னைக்குக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படுவது போல, தமிழகமெங்குமுள்ள கிராமங்களுக்கு நல்ல குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் முறை அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்காகவே குடிநீர் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

* 345 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to augment the drinking water supply in the City of Madras?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவிரி ஆற்றுப்பாசனப் பகுதியின் கடைக்கோடியிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீரைப் பெற்று, நாளொன்றுக்கு 4 கோடி காலன் தூய நீர் வழங்குவதன் மூலம் மாநகருக்கு நீர் வழங்குதலை மேம்படுத்தும் திட்டத்துக்கு ரூ. 21.3 கோடி மதிப்பீட்டுச் செலவுக்கும், அதனைப் பேணுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 35.00 லட்சம் செலவுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மேற்சொன்ன திட்டத்திற்குக் கூடுதலாக, ஏற்கெனவே கிடைக்கும் நீரளவைப் பாதுகாக்கவும், ஏற்கெனவே நீரைத் தேக்கிவைப்பதற்குள்ள தேக்கும் கொள்திறன் அளவை உயர்த்தவும், குடத்தலையாற்றுப் பள்ளத்தாக்கில் ஊற்றுநீரை எடுக்கவும், கீழ்க்கண்ட குறுகிய காலச் செயற்குறிப்புகள் அரசாலும் சென்னை மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன :

1. பூண்டியிலிருந்து தாமரைப்பாக்கத்திற்கும் அங்கிருந்து புழலேரிக்கும் திறந்த காரைப்பூச்சுக் கால்வாய் ஒன்றை அமைத்தல் ;

2. சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளின் கரைகளை உயர்த்துதல்;